வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 13.04.2026 திங்கட்கிழமை இதழ் : 97 பக்கங்கள் : 08

## வடக்கு-கிழக்குக்கும் வருகின்றார் இந்தியாவின் துணை ஜனாதிபதி!

### தமிழ் அரசியல் கட்சிகளையும் சந்திப்பார்

கொழும்பு, ஏப். 13

இந்தியத் துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் இரு நாள் பயணமாக எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கை வருகின்றார்.


இவ்விஜயத்தின்போது அவர் வடக்கு, கிழக்குக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை எண்ணெய் தாங்கித் திட்டம் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு திட்டங்களை அவர் பார்வையிடவுள்ளார்.

முல்லைத்தீவு, தெனியாய மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் மூன்று மருத்துவமனைத் திட்டங்கள் உள்ளிட்ட இலங்கையில் இந்திய நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் அவர் பார்வையிடுவார் என்று வெளிவிவகார வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்தப் பயணத்தின் போது இரு நாடு களுக்கும் இடையே பல புதிய உடன்பாடுகளும் கையெழுத்திடப்படும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தமிழ் மற்றும் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் இந்தியத் துணை ஜனாதிபதி பேச்சுக்களை நடத்தவுள்ளார். (அ)



## மீண்டும் போர் மூளும் அச்சம்!

லண்டன், ஏப். 13

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே சனிக்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், மீண்டும் போர் ஆரம்பமாகலாம் என்ற அச்சம் ஈரான் மற்றும் அதன் அண்டை நாடுகளிடையே அதிகரித்துள்ளதாக பிபிசி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹோர்முஸ் நீரிணையில் ஈரானின் எவ்வித ஒருங்கிணைப்பும் இன்றி, அங்குள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் அமெரிக்கா

07

## அமெரிக்கா - ஈரான் இடையே அமைதி முயற்சிகள் தோல்வி!

### நாடுகளுக்கு திரும்பின பேச்சு குழுக்கள்

இஸ்லாமாபாத், ஏப். 13

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பாகிஸ்தானில் இருந்து தாயகம் நோக்கி புறப்பட்டுள்ளனர்.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அமைதி பேச்சு தோல்வி அடைந்த நிலையிலேயே அவர்கள் சென்றுள்ளனர்.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் இராணுவத்துக்கு இடையே கடந்த

07

## இளவாலையில் கை துப்பாக்கி மீட்பு



யாழ்ப்பாணம், ஏப்,. 13

இளவாலை பகுதியில் நேற்று வீடொன்றில் இருந்து கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கி எதற்காக வைக்கப்பட்டிருந்தது, ஏதேனும் குற்றச் செயல்களுடன் இதற்குத் தொடர்புள்ளதா அல்லது வேறு எவரிடமிருந்தாவது இது கைமாற்றப்பட்டதா என்ற கோணத்தில் இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ரஷ்யா தயார்!

### ஈரான் ஜனாதிபதியுடன் புடின் பேச்சு

மொஸ்கோ, ஏப். 13

இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற அமெரிக்கா - ஈரான் இடையிலான பேச்சுவார்த்தைகள் உடன்பாடு எட்டப்படாத நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியானுடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடியுள்ளார்.

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை வழங்க ரஷ்யா

07

## ஹோர்முஸ் ஊடாகப் பயணிக்கும் கப்பல்களை முற்றுகையிடுவோம்!



### டொனால்ட் ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 13

ஹோர்முஸ் நீரிணை வழியாக நுழையும் அல்லது வெளியேறும் அனைத்து கப்பல்களையும் அமெரிக்கா முற்றுகையிடப் போவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது "ட்ரூத் சோஷியல்" தளத்தில் வெளியிட்டுள்ள நீண்ட பதிவில்,

07

## மின் கம்பத்துடன் மோதி நொருங்கியது வாகனம் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர் பயணிகள்!



### அம்பனில் நேற்று கோர விபத்து

யாழ்ப்பாணம்,ஏப். 13

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் நேற்று இடம்பெற்ற பாரிய வாகன விபத்தொன்றில், வாகனத்தில் பயணித்தவர்கள் அதிர்ஷ்டவசமாக எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

வாகனம் அம்பன் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது, முன்னால் சென்ற மற்றொரு

07

## மக்களுக்கு நிவாரணம் வழங்குக!

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 13

எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் மருந்துப் பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் உள்ள யோதகண்டிய போதி மஹா விகாரை, நாக மஹா விகாரை மற்றும் சித்தல்பவ்வ மகுல் மஹா விகாரை ஆகிய இடங்களுக்கு நேற்று விஜயம் செய்த அவர், அங்குள்ள தேரர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகள் குறித்துக்

07

## பொருள்களை அதிக விலைக்கு விற்றால் உடனே முறையிடுங்கள்!

கொழும்பு, ஏப். 13

பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் அல்லது மோசடிகள் குறித்து பொது மக்கள் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 1977 என்ற துரித இலக்கத்திற்கு முறைப்பாடு செய்யுமாறும் நுகர்வோர் விவகார அதிகாரசபை வலியுறுத்தியுள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் நுகர்வோர் ஏமாற்றப்படுவதைத் தடுப்பதற்கு, வார இறுதி நாட்களிலும் முற்றுகைகளை முன்னெடுக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

07

## பாரிய சூரியசக்தி மின்சார கட்டமைப்புகளை தற்காலிகமாக முடக்க மின்சார சபை உத்தரவு!

கொழும்பு, ஏப். 13

நாட்டின் மின் விநியோகக் கட்டமைப்பின் ஸ்திரத் தன்மையைப் பேணும் நோக்கில், பாரிய அளவிலான கூரை சூரிய சக்தி மின் உற்பத்தி கட்டமைப்புகளைத் தற்காலிகமாக முடக்குமாறு இலங்கை மின்சார சபை உத்தரவிட்டுள்ளது.

• கடந்த 10 ஆம் திகதி முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையிலான 10 நாட்களுக்கு இந்தத் தற்காலிகத் தடை அமுலில் இருக்கும் என

07

## மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 13

நிலக்கரி கொள்வனவில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் மற்றும் நிதி இழப்புகளை ஈடுகட்டுவதற்காக மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு அதனை வழங்கிய விநியோகஸ்தர்களும், பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளுமே பொறுப்பேற்க வேண்டும் எனவும், அந்தச்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்சார கட்டண திருத்தத்தில் கூடுதல் செலவு இடம்பெறாது

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 13

நிலக்கரி பற்றாக்குறையால் ஏற்படும் கூடுதல் செலவுகளை மின்சாரக் கட்டணத் திருத் தங்களில் சேர்க்கபோவதில்லை என இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சார உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகத்திற்காக ஏற்படும் நியாயமான செலவுகள் மட்டுமே மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவுகளில் கருத்தில் கொள்ளப்படுகின்றன என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

முந்தைய மின்சாரக் கட்டணத் திருத்தத் தீர்மானத்தில், நிலக்கரி பற்றாக்குறையால் ஏற்படும் கூடுதல் செலவுகள் அல்லது பிற நியாயமற்ற செலவுகள் அங்கீகரிக்கப்படவில்லை.

எதிர்கால கட்டணத் திருத்த முன்மொழிவுகளில் நிலக்கரி பற்றாக்குறையால் ஏற்படும் கூடுதல் செலவுகள் அல்லது பிற நியாயமற்ற செலவுகளைச் சேர்க்க வேண்டாம் என ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.எதிர்கால கட்டணத் திருத்த முன்மொழிவுகளில் நிலக்கரி பற்றாக்குறையால் ஏற்படும் கூடுதல் செலவுகள் அல்லது பிற நியாயமற்ற செலவுகளைச் சேர்க்க வேண்டாம் என ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

(அ)

# சித்திரை புத்தாண்டு விழாக்களை பகல் நேரங்களில் மட்டும் நடத்துக!

கொழும்பு, ஏப். 13

சித்திரை புத்தாண்டு விழாக்களையும் கொண்டாட்டங்களையும் பகல் நேரங்களில் மாத்திரம் நடத்துமாறு இலங்கை நிலைபேறுதகு எரிசக்தி அதிகாரசபை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டின் மின்சாரப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி, மின்சாரத்தைச் சேமிக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் டி.எம்.டபிள்யூ.ஜே. பண்டார தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேவேளை, மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், புத்தாண்டு விடுமுறை காலப்பகுதியில் அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும் போது, அங்கிருக்கும் மின்சார உபகரணங்கள் அனைத்தும் அணைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துமாறும் பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் நிலைபேறுதகு எரிசக்தி அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# தமிழக மீனவர்கள் 12 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 13

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைத் தாண்டிய, கடற்றொழில் ஈடுபட்ட 12 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் இதனை உறுதிபடுத்தினார்.

காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து வருகை தந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை காரைநகர் கடல் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தபோது நேற்று முன் தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்போது, விசைப்படகினையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், இவர்கள் யாழ்ப்பாண நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

(அ)

# புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலைக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர் இயந்திரம்!

யாழ்ப்பாணம், ஏப். 13

புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க, தீவகம் வாழ் மக்களின் நலனை கருத்திற் கொண்டு இரண்டாவது முறையாக நவீன தொழில்நுட்பங்களுடன் அமைந்த ரூபாய் 97 இலட்சம் பெறுமதியான அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர் புங்குடுதீவு கனகரத்தினம் அறக்கட்டளையினரால் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் இலங்கையின் முன்னணி மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவ, வ. பொ.கனகரத்தினம் அறக்கட்டளையின் உறுப்பினர்களான கனகரத்தினம் ரகுநாதன், மகாலிங்கம் திருத்தணி ஈசன், விஜிதா ஈசன், புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலை பிரதம வைத்தியர் சி.தாரணி, வைத்தியர் பர்ஷாத், ஓய்வுநிலை பாடசாலை அதிபர் எஸ். கே.சண்முகலிங்கம், நோயாளர் நலன்புரி சங்கத்தினர், வேலணை பிரதேச சபை உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு நடைபெற்ற விசேட மருத்துவ முகாமில் நெடுந்தீவு பிரதேசத்திலிருந்து வருகை தந்த கர்ப்பிணித் தாய்மார்களும் பங்குபற்றியிருந்தனர்.

(அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டறிவதற்கு நீதிமன்ற தீர்ப்பே இறுதியானது

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, ஏப். 13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகளை அடையாளம் காண்பதற்கு நீதிமன்றத் தீர்ப்பே இறுதியானது என ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்த 25 பக்கங்களைக் கொண்ட "பி" அறிக்கை ஏற்கனவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினார்.

கடந்த காலங்களில் பல்வேறு அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட பல விசாரணை ஆணைக்குழுக்கள் பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்த போதிலும், முழுமையான அறிக்கை ஒன்று நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்படுவது இதுவே முதல்முறை என அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு தனிநபர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வரும் நிலையில், எவ்விதத் தலையீடுகளுமின்றி நீதிமன்றத்தின் ஊடாக உண்மைகளை வெளிக்கொணர வழிவிட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

(அ)

# இலங்கை கருவுறுதல் வீதம் 1.3 வீதமாக குறைவடைந்தது

## முதியோர் எண்ணிக்கை 18 வீதமாக உயர்வு

கொழும்பு, ஏப். 13

இலங்கையின் மொத்த கருவுறுதல் வீதம் 1.3 வீதமாகக் குறைவடைந்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

1981-ஆம் ஆண்டில் 3.3 வீதமாகவும், 2012-இல் 2.4 வீதமாகவும் இருந்த இந்த வீதம், தற்போது 1.3 வீதமாக ஆகக் குறைந்திருப்பது நாடு வேகமாக முதியோர் சமூகத்தை நோக்கி நகர்வதைக் காட்டுகிறது.

குறிப்பாக, கொழும்பு மாவட்டத்தில் இது மிகக் குறைவாக ஒரு வீதமாக ஆகப் பதிவாகியுள்ளது.

சனத்தொகை கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக, 60 வயதுக்கு மேற்பட்ட முதியோரின் எண்ணிக்கை 18 வீதமாக அதிகரித்துள்ளது.

அதேநேரம், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 5.6 வீதமாகக் குறைந்துள்ளது.

சமூக முன்னேற்றத்தின் அடையாளமாக, நாட்டின் எழுத்தறிவு வீதம் 97.4 வீதமாக உயர்ந்துள்ளதுடன், முதல் முறையாக ஆண்களுக்கும் பெண்களுக்குமான இடைவெளி முழுமையாகக் குறைந்துள்ளது. மேலும், 67.6 வீதமானோர் டிஜிற்றல் அறிவைப் பெற்றுள்ளதோடு, 93.8 வீத வீடுகளில் கையடக்கத் தொலைபேசி பயன்பாடு காணப்படுவதாகவும், மோட்டார் சைக்கிள்களே பொதுவான போக்குவரத்துச் சாதனமாக மாறியுள்ளதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

(அ)

# வாகனங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கும் திட்டம் இல்லை

## நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 13

வெளிநாட்டு கையிருப்பு மற்றும் உலகளாவிய எரிசக்தி சந்தையில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியிலும், வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கும் திட்டம் ஏதும் தற்போதைக்கு இல்லை என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ள நிதி மற்றும் தற்போதுள்ள போதியளவு அந்நியச் செலாவணி கையிருப்பு காரணமாக இவ்வாறான கட்டுப்பாடுகள் அவசியமில்லை எனத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆனந்த கித்சிறி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக வாகனங்களுக்கான கேள்வி தானாகவே சீரடையும் எனத் தெரிவித்த அவர், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் 25 வீதமானவை ஆறு மாதங்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனச் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையே, மே மாதம் முதல் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி 2.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளதால் வாகன விலைகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

# 637 பேர் கைது!

கொழும்பு, ஏப். 13

நாடளாவிய ரீதியில் பொலிஸ் பிரிவுகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேகத்தின் பேரில் 637 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றங்கள் மற்றும் போதைப் பொருள்தடுப்புக்காக பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையின் நாளாந்த அறிக்கையை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக, பொலிஸ் பிரிவுகள் மட்டத்தில் அனைத்து பிரதேச பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த விசேட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில்637 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
13.04.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## கார்டினல் மல்கம் ரஞ்சித்தின் துணிச்சல்

ஈரான் மீது போரைத் தொடுத்து இன்று உலகம் முழுவதும் பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலையும் பொருளாதார நெருக்கடியையும் தோற்றுவித்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கண்டனம் செய்வதில் உலக நாடுகளின் அரசாங்க தலைவர்களும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஒருவிதமான "அச்சம் கலந்த நிதானத்தை" கடைப்பிடிக்கிறார்கள்.

அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களின் சமூக ஊடகப் பதிவுகளின் விபரங்களையும் அமெரிக்கத் தூதரகங்கள் கோர வேண்டும் என்று இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியிருப்பதாக செய்திகள் வெளியாகின. ட்ரம்ப் நிருவாகத்தின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் விமர்சிப்பவர்களுக்கு விசா கிடைப்பது பெரும்பாலும் சாத்தியமில்லை என்பதே இதன் அர்த்தம்.

ஆனால். கொழும்பு அதிமேற்றிராணியார் கார்டினல் மல்கம் ரஞ்சித் மத்திய கிழக்கு போருக்காக மிகவும் கடுமையாக ட்ரம்பைக் கண்டனம் செய்திருக்கிறார். இலங்கையின் வேறு எந்த முக்கியமான மதத் தலைவரும் அவ்வாறு இதுவரையில் செய்ய முன்வரவில்லை.

கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியஸ் தேவாயத்தில் உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனையில் உரையாற்றிய கார்டினல் ரஞ்சித், உலகம் முழுவதையும் ஆட்சிசெய்ய விரும்பும் ஒரு தனிமனிதனின் பேராசையால் மனிதகுலம் முழுவதுமே அவலத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஹிட்லர் "ஐரோப்பாவின் சக்கரவர்த்தியாக வருவதற்கு முயற்சித்தான். அவனுக்கு நேர்ந்த கதி என்ன?" என்று கேள்வி எழுப்பினார்.

மத்திய கிழக்கில் குண்டுமாரி பொழிந்து பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உலகின் மிகவும் பலம் பொருந்திய நாட்டின் தலைவருக்கு எதிராக இலங்கையின் சிறிய கத்தோலிக்க சமூகத்தின் தலைவரான கார்டினல் ரஞ்சித் துணிச்சலுடன் குரல் கொடுத்திருக்கிறார். "அந்த தலைவர் கிறிஸ்தவர் என்று அழைக்கப்பட முடியாதவர். ஏனைன்றால் கிறிஸ்தவர்கள் தங்கள் அயலவர்களை நேசிப்பவர்கள். அந்த தலைவர் தற்போது செய்வதை கிறிஸ்தவர்கள் ஒருபோதும் செய்யமாட்டார்கள்" என்று கார்டினல் கூறினார்.

அவரின் வார்த்தைகளை "ஈரான் மீதான போருக்கு பொறுப்பானவர்களின் நடுநெற்றியில் அறையப்பட்ட ஆணி" என்று ஈரானுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் எம்.எம். சுஹைர் வர்ணித்திருந்தார்.

இலங்கை அரசாங்கம் ஈரானுக்கு எதிரான போரை வெளிப்படையாகக் கண்டனம் செய்யவில்லை. சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் மத்திய கிழக்கில் அமைதியை நிலை நிறுத்தப் பாடுபட வேண்டும் என்று ஒரு மென்மையான அறிக்கையே அரசாங்கத்திடமிருந்து வந்தது.

எதிரணி அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை. அவை போரின் விளைவாக தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் கண்டிக்கின்ற அளவுக்கு அமெரிக்காவையோ அதன் ஜனாதிபதியையோ கண்டனம் செய்வதாக இல்லை. தாங்கள் ஆட்சியில் இருந்தால் நிலைவரத்தை சிறப்பாக கையாண்டிருக்க முடியும் என்ற பாவனையில் எதிரணி தலைவர்கள் பேசுகிறார்கள்.

அதேவேளை. சிவில் சமூகம் என்று தங்களை அழைக்கின்ற அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களோ அல்லது சிந்தனைக்குழாம் என்று தங்களை அழைக்கும் சாய்மனைக்கதிரை ஆய்வாளர்களோ ட்ரம்பை கண்டிக்க முன்வரவில்லை. பௌத்த உயர் பீடங்களின் மகாநாயக்கர்களும் கூட போரைக் கண்டனம் செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லை. இவர்கள் எல்லோரும் மௌனம் சாதிக்கும்போது கார்டினல் ரஞ்சித் போர் தொடர்பில் இன, மத வேறுபாடுகள் கடந்து இலங்கை மக்கள் கொண்டிருக்கும் உணர்வுகளை பிரதிபலித்து குரல் கொடுத்திருப்பது மெச்சப்பட வேண்டியதாகும்.

இது இவ்வாறிருக்க. மத்திய கிழக்கில் போர் மூண்டு ஏழு வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளில் எந்வொன்றும் அமெரிக்கவையும் ட்ரம்பையும் கண்டனம் செய்யமுன்வரவில்லை. ஆனால். வடக்கில் இலங்கை தமிழரசு கட்சியின் நிருவாகத்தில் உள்ள பிரதேச சபையொன்று ட்ரம்புக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியதையும் அதிலிருந்து கட்சியின் தலைமைத்துவம் தன்னைத் தூரவிலக்கிக் கொண்டதையும் கண்டோம். தமிழ்ப் பகுதிகளில் உள்ளூராட்சி சபைகளில் இருக்கும் எத்தனை பேருக்கு மனநல மருத்துவரின் ஆலோசனை அவசியமோ தெரியவில்லை.

# ஹோர்முஸ் நீரிணை: அமெரிக்காவின் கருத்தை முற்றாக நிராகரித்தது ஈரான்

தெஹ்ரான், ஏப். 13

ஹோர்முஸ் நீரிணையில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக அமெரிக்க கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் பணிகளை ஆரம்பித்துள்ளன என்ற அமெரிக்க மத்திய கட்டளை பணியகம் வெளியிட்ட அறிக்கையை ஈரான் முற்றாக மறுத்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணை வழியாக இரண்டு அமெரிக்க கடற்படை கப்பல்கள் பயணித்ததாக அமெரிக்க மத்திய கட்டளை பணியகம் தெரிவித்திருந்தது. எனினும், இந்த அறிக்கையை நிராகரித்துள்ள ஈரான் ஆயுதப் படைகளின் தலைமையகம், எந்தவொரு கப்பலும் அந்தப் பகுதியைக் கடப்பதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் ஈரானிய இஸ்லாமிய குடியரசின் ஆயுதப் படைகளுக்கே உள்ளது எனத் தெரிவித்துள்ளது.

மேலும், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு சிவில் கப்பல்கள் மட்டுமே நீரிணை வழியாகச் செல்ல அனுமதிக்கப்படுவதாக ஈரான் கூறியுள்ளது. அத்துடன், ஹோர்முஸ் நீரிணையை சட்டவிரோதமாக கடக்க முயற்சிக்கும் எந்தவொரு கப்பலுக்கும் எதிராக கடுமையான மற்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஈரான் எச்சரித்துள்ளது. (எ)

ஈரான் - அமெரிக்க

# அமைதி பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை

இஸ்லாமாபாத், ஏப். 13

ஈரானுடனான அமைதி பேச்சுவார்த்தையில் அமெரிக்கா நன்நோக்கத்துடனே கலந்துகொண்டதாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் 12 மணித்தியாலங்களுக்கும் மேலாக நீடித்த இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னர், முதன்முறையாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு ஈரான் உடன்படவில்லை என்றும், இரு நாடுகளுக்கும் இடையில் எந்தவித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஈரானின் அணு ஆயுதத் திறனைத் தடுப்பதே தமது பிரதான இலக்காகும் எனத் தெரிவித்த துணை ஜனாதிபதி, பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததையடுத்து அமெரிக்கத் தூதுக்குழுவினர் பாகிஸ்தானிலிருந்து வெளியேறத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

இருப்பினும், இந்தப் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தராக செயல்பட்ட பாகிஸ்தானுக்கு அவர் தனது நன்றிகளை தெரிவித்தார். (எ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 229 அலங்கார செடிகள் கைப்பற்றல்

## சுங்க அதிகாரிகளால் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 13

சட்டவிரோதமான முறையில் 7 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய அலங்கார செடிகளை நாட்டுக்குள் கொண்டு வந்த பயணி ஒருவர், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

வெயாங்கொடை பகுதியைச் சேர்ந்த 40 வயது வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இந்தியாவின் பெங்களூரு நகரில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளுக்குள் இருந்து 229 அலங்கார செடிகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பெற்றோரின் கவனக்குறைவால் விபத்துகளில் சிக்கும் குழந்தைகள்

## புத்தாண்டு காலத்தில் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்!

கொழும்பு, ஏப். 13

புத்தாண்டு காலத்தில் குழந்தைகள் குறித்து அதிக அவதானத்துடன் செயல்படுமாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோரின் கவனக் குறைவு காரணமாகவே குழந்தைகளுக்கு அதிகளவில் விபத்துக்கள் ஏற்படுவதாகவும், அத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க பெற்றோர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புத்தாண்டு காலத்தில் குழந்தைகளுக்கு பாரம்பரிய விளையாட்டுக்கள் குறித்து தெளிவுபடுத்த வேண்டும். அவர்களை அந்த விளையாட்டுக்களில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் குழந்தைகள் தொலைபேசிகளுக்குள் முடங்கிப் போய்விடுவார்கள்.

ஒவ்வொரு வருடமும் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது குழந்தைகளின் மீதான கவனம் குறைவதைக் காண்கிறோம். குழந்தைகள் விளையாட வேண்டும், ஆனால் பட்டாசு மற்றும் வாணவேடிக்கைகளைக் கையாளும் போது விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையிலும், கண்களுக்கு பாதிப்பு ஏற்பட்ட நிலையிலும் பல குழந்தைகள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படுகிறார்கள். இந்த வருடம் இதனைத் தவிர்த்துக்கொள்வோம்.

தந்தைமார் மது அருந்திவிட்டு குழந்தைகளுடன் வாகனங்களில் பயணிப்பதன் மூலம் விபத்துக்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளன. அத்துடன், சுற்றுலா செல்லும் இடங்களிலும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய வீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தரு வீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்பு களை ஒப்படைப்பார்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களை நினைவுக்கு வரும். புதியவர் களை நம்பி ஏமாற வேண்டாம். சகோதர வகை யில் அலைச்சல் இருக்கும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புதியவர்கள் நண் பர்களாவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரி வடையும்.தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**சிம்மம்**
சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பேசி காரி யம் சாதிப்பீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக முடியும். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**கன்னி**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்ப டைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உங் களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினை வுகூர்ந்து மகிழ்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்பு ணர்வு அதிகமாகும். திடீர் பயணம் உண்டு. வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் தேடி வந்து பேசுவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**தனுசு**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். உறவினர்கள் நண்பர்களால் நன்மை உண்டு. நம்பிக்கைக்குரிய ஒரு சிலருக்கு உத வுவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உங்களை அறி யாமலேயே தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும். உறவினர் நண்பர்களால் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண் டாம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வாகனம் தொந்தரவு தரும்.

**மீனம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து நல்ல செய்தி வரும்.

# ஒரு வார காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 49 பேர் மரணம்

கொழும்பு, ஏப். 13

நாடளாவிய ரீதியில் ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப்பகுதியில் மாத்திரம் இடம்பெற்ற வாகன விபத்துக் களில் 49 பேர் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் நகர அபிவி ருத்தி அமைச்சர் பிமல் ரத்நா யக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன் றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மதுபோதையில் அல்லது போதைப்பொருள் பாவித்த நிலையில் வாகனம் செலுத்திய மையினாலேயே இந்த விபத் துக்களில் பெரும்பாலானவை இடம்பெற்றன.

அபாயகரமான முறையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் குறித்து பொலிஸா ருக்குத் தெரியப்படுத்துமாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதன்போது பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# மணல் விநியோக சங்கிலியை உறுதிசெய்வதில் திடசங்கற்பம்

## -வடமாகாண ஆளுநர் வேதநாயகன்-

முல்லைத்தீவு, ஏப். 13

பொதுமக்கள் மணலை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்ற னர். மணலுக்கான விலையை கட்டுப்படுத்தி, அதன் விநியோ கச் சங்கிலியை உறுதிசெய்வ தில் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இந்த நடவடிக் கைக்கு அனைவரும் முழுமை யான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சகல அரச திணைக் களங்களுக்கும் இதில் சமூகப் பொறுப்பு உள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் கூறு கையில்,

"மணல் மாபியாக்களுடன் இணைந்து சில அதிகாரிகள் செயல்படுவதாக அறிய முடி கின்றது. இவ்வாறான செயல்பா டுகளுக்கு இனி ஒருபோதும் இடமளிக்க முடியாது. அவர் கள் எதிர்காலத்தில் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். எங்கு கனியவளங்களை அகழ முடியும், எவ்வளவு அளவுகளில் அகழ முடியும், விநியோகம் மற்றும் அனுமதிகள் தொடர் பான அனைத்து விடயங்களும் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான மாவட்ட மட்ட குழுவிலேயே இனி தீர்மானிக்கப்படும்.

இந்த அனுமதிகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். அவர்களால் உரிய முறையில் செயல்பட முடியாவிட்டால் மாத்திரமே மாற்று வழிகள் குறித்து ஆராயப்படும். இந்த புதிய பொறிமுறையை ஒழுங்க மைப்புக்கு கொண்டுவர அனை வரும் ஒத்துழைக்க வேண் டும்."- என்றார். (எ)

# வடமராட்சி கடற்பரப்பில் மீள இந்திய மீனவர்கள் அத்துமீறல்

## கடற்படையினர் பாராமுகம்: மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 13

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கடற்பரப்பில், எல்லை தாண்டி வந்த இந்திய மீனவர் கள் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளில் ஈடுபடுவதாகவும், இதனைத் தடுப்பதில் கடற்ப டையினர் மெத்தனப் போக்கு டன் செயல்படுவதாகவும் மீன வர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாகர்கோவில் கிழக்கு திசை யில், கரையில் இருந்து சுமார் 16 கிலோமீற்றர் தொலைவில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்தனர். இவர்கள் இந்தி யப் பகுதிகளில் பயன்படுத்தப்ப டும் "குல்லா" எனப்படும் படகு களில் வந்து, இலங்கைக் கடற் பரப்பில் தடைசெய்யப்பட்ட "லாம்பு" மீன்பிடி தொழிலில் ஈடுபட்டதை மீனவர்கள் நேரில் கண்டுள்ளனர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த உள்ளூர் மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தமது தொலைபேசிகள் மூலம் காணொலிப் பதிவாக எடுத்து வெளியிட்டனர்.

"நாங்கள் எமது கடற்பரப் பில் வாழ்வாதாரத்துக்காக தொழில் செய்யும்போது, சிறிய விதிமீறல்களைக் காரணம் காட்டி கடற்படையினர் எங்க ளைக் கைது செய்கிறார்கள். ஆனால், எல்லை தாண்டி வந்து எமது வளங்களைச் சூறையா டும் இந்திய மீனவர்களைக் கடற்படையினர் வேடிக்கை பார்க்கிறார்கள்" என மீனவர் கள் வேதனை வெளியிட்டுள்ள னர்.

இதேவேளை, இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தவும், தடைசெய் யப்பட்ட மீன்பிடி முறைகளை தடுத்து நிறுத்தவும் உரிய தரப் பினர் உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என வடம ராட்சி கிழக்கு மீனவ சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (எ)

# நிலக்கரி இறக்குமதி முறைகேடு தனியார் நிறுவனத்துக்கு சீல்!

## சி.ஐ.டி. விசாரணை தீவிரம்

கொழும்பு, ஏப். 13

2009ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு மேற்கொள்ளப் பட்ட நிலக்கரி இறக்குமதி செயல்முறைகள் தொடர்பில் விரிவான விசாரணை மேற கொள்ளும் நோக்கில், ஜனாதி பதியின் செயலாளர் குற்றப்பு லனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்துக்கு அதி காரபூர்வமாக சீல் வைக்கப்பட் டதுடன், அந்த நிறுவனத்துக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், நிலக்கரி இறக் குமதியில் பல்வேறு முறை கேடு கள் இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், 2009 முதல் மேற்கொள்ளப் பட்ட அனைத்து இறக்கு மதி நடவடிக்கைகளும்விசாரணைக்கு உட்படுத்தப்பட வுள்ளன.

இதனடிப்படையில், ஜனா திபதியின் செயலாளர் சனிக்கி ழமை முற்பகல் குற்றப் புலனாய் வுப் பிரிவில் உத்தி யோகபூர்வ முறைப்பாட்டை பதிவு செய் துள்ளார்.

இந்த விசாரணையின் மூலம், கடந்த காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் முறை கேடுகள், ஒப்பந்த நடைமுறை களில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், மற்றும் நிதி தொடர்பான முறை கேடுகள் என்பன முழுமையாக ஆய்வு செய்யப்படவுள்ளன.

மேலும், இந்த நடவடிக் கைகள் மூலம் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதோடு, எதிர்காலத்தில் இத்தகைய தவ றுகள் மீண்டும் இடம்பெறாத வகையில் தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கை கள் எடுக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்வனவு சாத்தியமற்றது

## முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க



கொழும்பு, ஏப். 13

ரஷ்ய பிரதிநிதிகளின் வருகையை ஒரு பெரிய வெற்றியாக அரசாங்கம் காட்ட முற்பட்டாலும், அது வெறும் அரசியல் பிரசாரமாகும். அரசாங்கம் கூறுவது போல ரஷ்ய அரசாங்கத்துடன் நேரடி ஒப்பந்தம் மூலம் எரிபொருள், உரம் அல்லது நிலக்கரியை பெறுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "ரஷ்யாவில் பத்து ஆண்டுகள் தூதுவராகப் பணியாற்றிய அனுபவத்தின் அடிப்படையில், ரஷ்யா இத்தகைய இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தங்களை தனக்கு மிகவும் நெருக்கமான அல்லது இராஜதந்திர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நட்பு நாடுகளுடன் மட்டுமே மேற்கொள்ளும். இலங்கை ரஷ்யாவுக்கு எதிரான நாடு அல்ல என்றாலும், ரஷ்யாவின் நெருங்கிய நட்பு நாடுகள் பட்டியலில் இலங்கை தற்போது இல்லை.

2024 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் விடுத்த நேரடி அழைப்பை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நிராகரித்தார்.

இதன் காரணமாக இலங்கைக்கு சிறப்பு அரசியல் ஆதரவை வழங்க ரஷ்யா ஆர்வம் காட்டாது.

ரஷ்யாவுடனான வர்த்தகத்தை டொலருக்கு பதிலாக ரூபிள் நாணயத்தில் மேற்கொள்ள ரஷ்யா விரும்பினாலும், அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச அழுத்தங்கள் காரணமாக இலங்கை மத்திய வங்கி அதனை ஏற்க தயங்குகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் எரிபொருள் வாங்க முயற்சி செய்து தோல்வியடைந்ததை போலவே, தற்போதைய அநுர குமார அரசாங்கமும் ரஷ்ய அரசாங்கம் எனக்கூறி இடைத்தரகர்கள் மூலம் தனியார் துறை மோசடியிலேயே ஈடுபடுகிறது.

இருப்பினும், ரஷ்யாவுடனான உறவை வலுப்படுத்த அணுசக்தி திட்டங்களுக்கு உடன்படுதல் மற்றும் ரூபிள் நாணயப் பயன்பாட்டை அங்கீகரித்தல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க முடியும்."- என்றார். (எ)

# கூர்மையான ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை! ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 13

ஹொரானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வானேகம பகுதியில் சனிக்கிழமை கூர்மையான ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். தனிப்பட்ட தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவத்தில் போருவதண்ட பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபருக்கும் அவரது அயல் வீட்டாருக்கும் இடையில் நிலவிய நீண்டகால தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் நேர்ந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 32 வயது சந்தேகநபர் ஒருவரை ஹொரானை பொலிஸார் கைது செய்தனர். (எ)

# பஸ் விபத்தில் சிக்கி 10 வயது மாணவி பலி

கொழும்பு, ஏப். 13

மட்டக்குளியில் பஸ் ஒன்றில் மோதி இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்தார்.


மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேன்தல தொட்டுபொல வீதியில் பஸ்ஸிலிருந்து இறங்கி வீதியைக் கடக்க முயன்ற பாடசாலை மாணவி ஒருவர், அதே பஸ்ஸில் மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்தில் படுகாயமடைந்த மாணவி கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மாணவி மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்த 10 வயதுடையவர் ஆவார்.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டதுடன், மட்டக்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாதுகாப்பான குடிநீரை வழங்க நீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு



அநுராதபுரம், ஏப். 13

பொதுமக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனை மேம்படுத்தும் நோக்கில், கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலில், ஜனாதிபதி செயலகத்தின் நிதி அனுசரணையுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் அநுராதபுரம் மாவட்ட செயலகத்துக்கு நாளாந்தம் வருகை தரும் பெருமளவிலான மக்கள் தூய்மையான குடிநீரை பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (எ)

# இலங்கையில் மீண்டும் ஒரு மின்வெட்டு அச்சம்

கொழும்பு, ஏப். 13

இலங்கையில் மீண்டும் எரிபொருள் நெருக்கடிக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ள நிலையில், பாரிய மின்சார நெருக்கடி குறித்த அச்சமும் மக்கள்மத்தியில்மேலோங்கியுள்ளது.

கடந்த வாரம் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரக் கட்டணத்தை சுமார் 25 சதவீதத்தினால் உயர்த்தியமை இதற்கு ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளதுடன் ஜனாதிபதி அநுரகுமர திஸநாயக்கவின் அண்மைய பாராளுமன்ற உரையின் போது மின் கட்டணம் குறித்துக் குறிப்பிட்டிருந்தார்.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக ஆரம்பத்திலிருந்தே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகள் கடும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன. மக்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை கருத்தில்கொண்டு, நேரடியாகவே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குச் சென்று எதிர்க்கட்சிகள் நிலைமையை விளக்கியுள்ளன.

எரிபொருள் மற்றும் எரிவாயு விலை உயர்வை மக்கள் சகித்துக் கொண்டாலும், மின்சாரக் கட்டண உயர்வு அல்லது மின்வெட்டு என்பது மக்களின் பொறுமைக்கு விடப்படும் சவாலாக அமையும் என சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு கடத்தல் சம்பவம்: சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஏப். 13

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்காடு பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பெண் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டதுடன், மற்று மொரு பெண் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடத்தல், கொள்ளை மற்றும் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களையும், அவர்களுக்கு உடந்தையாக இருந்த இரண்டு நகைக்கடை உரிமையாளர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணையின்போது, சந்தேக நபர்களில் ஒருவர் மாத்திரமே நேரில் முன்னிலைப்படுத்தப்பட்டார். ஏனைய சந்தேக நபர்களிடம் நிகழ்நிலை ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

வழக்கின் மேலதிக விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 15ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ளன. (எ)

# 19 வயது இளைஞன் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 14

சீதுவை - கொட்டுகொட வீதியின் 3 கிலோ மீற்றர் கம்பத்துக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் 19 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

கொட்டுகொட நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, அதற்கு எதிரே வந்த லொறி ஒன்றில் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்தது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி சீதுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீகொட பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். விபத்து தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## ஈரானிய படையினரை மீண்டும் அனுப்ப தீர்மானிக்கப்படவில்லை

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

இலங்கை கடற்பரப்பில் அண்மையில் இடம்பெற்ற ஈரானிய கப்பல் மீதான தாக்குதல் மற்றும் இலங்கையில் ஈரானிய படையினரின் இருப்பு குறித்த விவாதங்கள் தற்போது சர்வதேச மட்டத்தில் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், இலங்கையில் தங்கவைக்கப்பட்டுள்ள ஈரானிய படையினரை மீண்டும் தாயகம் அனுப்புவது குறித்து தீர்மானிக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர், இலங்கையின் ஆழ்கடல் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த ஈரானிய கப்பல் ஒன்று இலக்கு வைக்கப்பட்டு தாக்குதலுக்கு உள்ளானது. குறிப்பாக, மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழல் இந்தியப் பெருங்கடல் பகுதிக்கும் பரவியுள்ளதையே இந்தத் தாக்குதல் உறுதிப்படுத்தியது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, இலங்கை கடற்படையினர் மற்றும் சர்வதேச பாதுகாப்புக் குழுக்கள் அப்பகுதியில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தின. இதனைத் தொடர்ந்து மற்றுமொரு ஈரானிய கப்பலில் இருந்த அந்த நாட்டு கடற்படையினரை பாதுகாப்பாக மீட்டு திருகோணமலை துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களை மீண்டும் ஈரானுக்கு அனுப்ப வேண்டாம் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுத்திருந்த நிலையில், இலங்கையில் ஈரானிய படையினர் தங்கியிருப்பது குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு நிலையில் இந்த ஈரானிய படையினரை மீண்டும் அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என வினவப்பட்டபோது, "இல்லை" என வெளிவிவகார அமைச்சு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. (எ)

# வெறும் 50, 300 பேருக்கு மட்டுமே அஸ்வெசும வழங்கப்படுகிறது

கொழும்பு, ஏப். 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள். குறைந்தது இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு இந்த உதவி தேவைப்படுகின்றது. ஆனால், வெறும் 50, 300 பேருக்கு மாத்திரமே அஸ்வெசும வழங்கப்படுகின்றது. ஏனையோரின் நிலை என்ன? அவர்கள் முன்வைத்த மேன்முறையீடுகளுக்கு என்ன நடந்தது? என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

"இன்று எமது நாட்டில் "அஸ்வெசும" நலன்புரித் திட்டமானது 24 மில்லியன் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாகக் கருதப்படுகின்றது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்தத் திட்டத்துக்கான தகுதிகளைத் தீர்மானிக்க அரசாங்கம் இன்னும் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தரவுகளையே பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த நாடு கோவிட் பெருந்தொற்றையும், வரலாற்றில் எப்போதுமில்லாத மோசமான பொருளாதார நெருக்கடியையும் சந்தித்திருக்கின்றது.

உலக வங்கியின் தரவுகளின் படி, இலங்கையின் வறுமை விகிதமானது 11 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும்போது, காலாவதியான தரவுகளை வைத்துக் கொண்டு மக்களுக்கு எவ்வாறு சரியான முறையில் நிவாரணங்களை வழங்க முடியும்? இதனால் தான் தகுதியுள்ள பல ஏழைக் குடும்பங்கள் இன்று அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக எனது மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கு 40 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள். குறைந்தது இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு இந்த உதவி தேவைப்படுகின்றது- என்று கேள்வியெழுப்பினார். (எ)

# தெமட்டகொட சமிந்தவை படுகொலை செய்ய சதி?

### குற்றப் புலனாய்வு பணியகம் தீவிர விசாரணை!

கொழும்பு, ஏப். 13

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சமிந்த ரவி ஜயநாத் எனப்படும் "தெமட்டகொட சமிந்தவை" கொலை செய்யும் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தகவல் குறித்து மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பூஸா சிறைச்சாலையிலிருந்து தன்னை வெலிசறை கடற்படை முகாமுக்கு மாற்றுவதைத் தடுப்பதற்காகவே சமிந்த இதனைத் திட்டமிட்டுள்ளாரோ என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட தெமட்டகொட சமிந்த, தற்போது பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அங்கு இருந்தவாறே அவர் தொலைபேசி ஊடாக குற்றச் செயல்களை வழிநடத்துவதாக கடந்த காலங்களில் புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டிருந்தனர்.

இதனடிப்படையில், தெமட்டகொட சமிந்தவை வெலிசறை கடற்படை முகாமுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெளியான தகவலைத் தொடர்ந்து, அங்கு வைத்து அவர் படுகொலை செய்யப்படவுள்ளதாக கூறப்படும் குரல் பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவன்சவின் வழிகாட்டலின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இது குறித்து நீதிமன்றத்துக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் உயர் அதிகாரிகளிடமும் தெமட்டகொட சமிந்தவிடமும் வாக்கு மூலம் பெறுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

பூஸா சிறையிலிருந்து தன்னை வெலிசறவுக்கு மாற்றுவதைத் தடுப்பதற்காகவே தெமட்டகொட சமிந்த இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருக்கலாம் என பொலிஸார் பலத்த சந்தேகம் கொண்டுள்ளனர். (எ)

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதிரடி தீர்மானம்

கொழும்பு, ஏப். 13

மின்சார உற்பத்தி, கடத்துகை மற்றும் விநியோகத்துக்காக ஏற்படும் நியாயமான செலவுகளை மட்டுமே மின்சாரக் கட்டணத் திருத்தங்களின் போது கருத்தில் கொள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஆணைக்குழு இதனை தெரிவித்துள்ளது.

அண்மைய மின்சாரக் கட்டணத் திருத்தத் தீர்மானத்தின் போது,

நிலக்கரி நிலைமை காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவுகள் அல்லது வேறு ஏதேனும் நியாயமற்ற செலவுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன், எதிர்கால மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவுகளிலிருந்தும் நிலக்கரி நெருக்கடி தொடர்பான மேலதிக செலவுகள் அல்லது ஏனைய நியாயமற்ற செலவுகளை நீக்குவதற்கு ஆணைக்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது. (எ)

## 7 பாதாள உலக குழு தலைவர்கள் வெலிசற சிறைக்கு இடமாற்றம்

கொழும்பு, ஏப். 13

பூஸா அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த முக்கிய ஏழு பாதாள உலகக் குழுத் தலைவர்கள் வெலிசற புதிய சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த கைதிகள் வெலிசற சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

இவ்வாறு இடமாற்றப்பட்டவர்களில் வெலே சுதா, தெமட்டகொட சமிந்த, லொகு பெட்டி, மிதிகம ருவன், பெக்கோ சமன், ஆர்மி சம்பத் மற்றும் மன்னா ரமேஷ் ஆகிய முக்கிய குற்றவாளிகள் உள்ளடங்குகின்றனர்.

பூஸா சிறைச்சாலையில் இருந்தவாறு இவர்கள் பல்வேறு கடத்தல் மற்றும் குற்றச்செயல்களை வழிநடத்திய தாக கிடைத்த தகவல்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிசற கடற்படை முகாம் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய சிறைச்சாலையானது விசேட பாதுகாப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதுடன், அந்த சிறைச்சாலையின் முதலாவது கைதிகள் குழுவாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மீண்டும் போர்...

ஈடுபட்டுள்ளது.

குறித்த நீரிணையின் கப்பல் போக்குவரத்தை ஈரான் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில், இந்த விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு நேரடி மோதல் களமாக மாறக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்து ஈரானியத் தூதுக்குழுவின் தலைவர் மொஹமட் பாகர் காலிபாப் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்துள்ளார்.

அதில், இந்த சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது ஈரானியத் தூதுக்குழுவின் நம்பிக்கையை வென்றெடுக்க அமெரிக்கா தவறிவிட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இருப்பினும், மேலதிக பேச்சுவார்த்தைகளுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்தும் பாகிஸ்தான், இன்னும் 10 நாள்களுக்கு அமுலில் இருக்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பும் மதிப்பார்கள் என நம்புவதாகவும், இது மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இஸ்லாமாபாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் வெளியிட்ட கருத்துக்கள் நம்பிக்கையற்ற சூழலையே தோற்றுவித்துள்ளன.

ஈரானியர்கள் அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு உடன்படவில்லை. எமது இறுதி மற்றும் மிகச்சிறந்த முன்மொழிவை நாம் வழங்கியுள்ளோம். அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இழுபறி நிலை காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் போர் பதற்றம் மேலும் தீவிரமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மத்திய கிழக்கில்...

தயாராக இருப்பதாக இதன்போது புடின் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களுக்கு அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலான தீர்வுகளைக் காண்பதற்கு ரஷ்யா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என புடின் உறுதியளித்துள்ளார்.

மத்திய கிழக்கில் நீதியான மற்றும் நிலையான சமாதானத்தை எட்டுவதற்கான முயற்சிகளில் ரஷ்யா மத்தியஸ்தராகச் செயற்படத் தயாராக இருப்பதை கிரெம்ளின் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையில் இழுபறி நிலை நீடிக்கும் சூழலில், ரஷ்ய ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. (அ)

## ஹோர்முஸ்...

ஈரானுடனான சந்திப்புகள் சுமுகமாக அமைந்த போதிலும், அணுசக்தி விவகாரத்தில் உடன்பாடு எட்டப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

"ஹோர்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்தை முற்றுகையிடுமாறு கடற்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தடையற்ற போக்குவரத்து குறித்து எதிர்காலத்தில் உடன்பாடு எட்டப்படலாம், ஆனால் ஈரான் அதற்கு இதுவரை ஒத்துழைக்கவில்லை.

நீரிணைப் பகுதியில் ஈரான் அமைத்துள்ள கண்ணிவெடிகளை அழிக்கும் பணிகளை அமெரிக்க கடற்படை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. "எங்காவது கண்ணிவெடிகள் இருக்கலாம்" என ஈரான் கூறுவதை ஏற்க முடியாது" என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், ஈரானுக்கு கப்பல் போக்குவரத்துக்காக சட்டவிரோதமாக வரி செலுத்திவிட்டு, சர்வதேச கடற்பரப்பில் பயணிக்கும் அனைத்து கப்பல்களையும் இடைமறித்து சோதனையிடுமாறு கடற்படைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு ஈரானுக்கு வரி செலுத்தும் கப்பல்களுக்கு சர்வதேச கடற்பரப்பில் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது.

அமெரிக்கப் படைகள் மீதோ அல்லது அமைதியான முறையில் பயணிக்கும் கப்பல்கள் மீதோ ஈரான் தாக்குதல் நடத்தினால், அவர்கள் மிகக் கடுமையான பதிலடியைச் சந்திக்க நேரிடும் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

"இந்த முற்றுகை நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பமாகும்" எனத் தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப், அணுசக்தி தொடர்பான முக்கிய கோரிக்கைகளை ஈரான் ஏற்காததே இந்தத் தீவிர முடிவுக்குக் காரணம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## அமெரிக்கா...

பெப்ரவரி மாதம் 28-ஆம் திகதி முதல் போர் நடைபெற்று வந்தது.

பாகிஸ்தானின் மத்தியஸ்தத்துடன் கடந்த 8 ஆம் திகதி இரு வார கால போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

இந்நிலையில் இரு தரப்புக்கும் இடையிலான அமைதி பேச்சு இஸ்லாமாபாத்தில் நேற்று முன் தினம் ஆரம்பமானது.

அமெரிக்க தரப்பில் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தலைமையிலான குழுவினரும், ஈரான் தரப்பில் பாராளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப், வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி உள்ளிட்ட தூதுக் குழுவினரும் இதில் பங்கேற்றனர்.

14 மணிநேரம் பேச்சுவார்த்தை நடந்தும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இரு தரப்பினரும் பாகிஸ்தானில் இருந்து புறப்பட்டுள்ளனர். (அ)

# புத்தாண்டு காலத்தில் சிறுவர் பாதுகாப்பு குறித்து அவதானம்

கொழும்பு, ஏப். 13

பண்டிகை மற்றும் புத்தாண்டு காலத்தில் சிறுவர்கள் குறித்து அதிக அவதானத்துடன் செயற்படுமாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோரின் கவனக்குறைவு காரணமாகவே சிறுவர்களுக்கு அதிகளவில் விபத்துக்கள் ஏற்படுவதாகவும், அத்தகைய விபத்துக்களைத் தவிர்க்க பெற்றோர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தாண்டு காலத்தில் சிறுவர்களுக்கு பாரம்பரிய விளையாட்டுக்கள் குறித்து தெளிவுபடுத்தவேண்டும். அவர்களை அந்த விளையாட்டுக்களில் ஈடுபடுத்தவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளுக்குள் முடங்கிப் போய்விடுவார்கள்.

அத்துடன், பலாகாரங்கள், பாற்சோறு போன்ற பாரம்பரிய உணவுகள் மற்றும் உள்ளூர் பழங்களை சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு வருடமும் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது குழந்தைகளின் மீதான கவனம் குறைவதைக் காண்கிறோம்.

சிறுவர்கள் விளையாடவேண்டும், ஆனால் பட்டாசு மற்றும் வாண வேடிக்கைகளைக் கையாளும் போது விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையிலும், கண்களுக்கு பாதிப்பு ஏற்பட்ட நிலையிலும் பல சிறுவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகிறார்கள். இந்த வருடம் இதனைத் தவிர்த்துக்கொள்வோம்.

தந்தைமார் மது அருந்திவிட்டு சிறுவர்களுடன் வாகனங்களில் பயணிப்பதன் மூலம் விபத்துக்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது- என்றார்.

(அ)

## மின்சார...

சுமையை நுகர்வோர் மீது சுமத்த முடியாது எனவும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை நிராகரித்துள்ள ஆணைக்குழு, மூன்றாவது காலாண்டு வரை புதிய கட்டணத் திருத்தங்கள் எவையும் பரிசீலிக்கப்பட மாட்டாது எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இதனிடையே, நிலக்கரி தட்டுப்பாட்டினால் டீசல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ததன் காரணமாக சுமார் 42 பில்லியன் ரூபாய் மேலதிக சுமை ஏற்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நட்டத்தை அபராதங்கள் மூலம் விநியோகஸ்தர்களிடமிருந்து அறவிட முடியுமா என்பது குறித்து ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு, இம்மாத இறுதியில் இது தொடர்பான முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ)

## மின் கம்பத்துடன்...

வாகனத்தை முந்திச் செல்ல முயற்சித்துள்ளது. இதன்போது கட்டுப்பாட்டை இழந்த வாகனம், வீதியோரத்திலிருந்த மின்கம்பத்துடன் மிகப்பாரிய வேகத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

மின்கம்பத்துடன் மோதிய வேகத்தில் வாகனம் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தின் காரணமாக குறித்த பகுதியில் இருந்த மின் கம்பம் சேதமடைந்துள்ளதுடன், அப்பகுதிக்கான மின்சார விநியோகமும் தற்காலிகமாக பாதிக்கப்பட்டது.

வாகனம் கடுமையாகச் சேதமடைந்த போதிலும், அதில் பயணித்தவர்கள் எவ்வித பாரிய காயங்களுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

## மக்களுக்கு...

கேட்டறிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருள்களின் விலை அதிகரிப்பால் நாட்டின் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு தள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் என மக்கள் எதிர்பார்த்த போதிலும், மின்சாரக் கட்டணம், எரிபொருள், எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் தாங்க முடியாத அளவில் அதிகரித்துள்ளன.

உரம் தட்டுப்பாடு போன்ற நிலைமைகளால் நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பொருள்களின் விலை அதிகரிப்புக்கான தீர்வு குறித்து ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் கேள்வி எழுப்புவதாகவும், இந்தத் தருணத்தில் எரிபொருள், எரிவாயு விலைகள் மட்டுமன்றி மின்சாரக் கட்டணம், உணவு, உரம் மற்றும் மருந்துப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கோடிக்கணக்கான மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தால், அதிகரித்துள்ள பொருட்களின் விலைகளுக்கு இன்னும் தீர்வை வழங்க முடியாமல் போயுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (அ)

## பொருட்கள்...

அதன்படி, வார இறுதி நாள்களிலும் சந்தை விலைகளை கண்காணிப்பதற்கு, விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரசபையின் பதில் பணிப்பாளர் சமந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த கண்காணிப்புகளுக்காக 350 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள், பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றதா? என்பதைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் நாடு முழுவதும் சுமார் 06 ஆயிரம் முற்றுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

## பாரிய சூரியசக்தி...

அறிவிக்கப்பட்டுள்ளது.

300 கிலோவாட் கொள்ளளவுக்கு மேல் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சூரியசக்தி கட்டமைப்புகளுக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சித்திரை புத்தாண்டு விடுமுறை காலப்பகுதியில் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் இயக்கம் குறைவடைவதால் மின்சாரத்திற்கான கேள்வி வீழ்ச்சியடையும். அதேநேரம், தற்போது நிலவும் கடும் வெயில் காரணமாக சூரிய சக்தி மின் உற்பத்தி கணிசமாக அதிகரிக்கும்.

இவ்வாறு கேள்வியை விட மின் உற்பத்தி அதிகமாகும் போது, மின் விநியோகக் கட்டமைப்பில் சமநிலையற்ற தன்மை ஏற்பட்டு செயலிழப்புகள் ஏற்படக்கூடும் என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# வாராந்தம் மாறும் எரிபொருள் விலை?

## அரசின் புதிய திட்டம்!

கொழும்பு, ஏப். 13

தற்போது நடைமுறையில் உள்ள மாதாந்த மறுஆய்வு முறைக்குப் பதிலாக, உலக எண்ணெய் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் அடிப்படையில், ஒரு மாதத்துக்குள் பலமுறை எரிபொருள் விலைத் திருத்தங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு புதிய எரிபொருள் விலை நிர்ணய முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்த உள்ளது.

இந்த புதிய முறைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என்றும், இது மே மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, வாராந்த அடிப்படையில் திருத்தங்களைக் கருத்தில் கொள்ளும் சாத்தியக்கூறுடன் விலைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

ஒரு வாரத்தில் உலக விலைகள் குறைந்தால், இலங்கை அதற்கேற்ப விலைகளைச் சரிசெய்யும். அதேபோல், அடுத்த வாரம் விலைகள் உயர்ந்தால், உள்ளூர் விலைகளும் அதிகரிக்கப்படும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து உலக எண்ணெய் சந்தையில் நிலவும் நிலையற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலங்கைக்கான நான்காண்டு நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ், ஐந்தாவது மற்றும் ஆறாவது ஒருங்கிணைந்த மறுஆய்வுகள் குறித்த பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை கடந்த வியாழக்கிழமை சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

மிகவும் நலிவடைந்தவர்களுக்கு உதவும் அதே வேளையில், செலவு மீட்பு எரிபொருள் மற்றும் மின்சார விலை நிர்ணயத்தை செயல்படுத்துவதைப் பொறுத்தே சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி விடுவிப்பு அமையும் என்று கூறியுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)



மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேகம் நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது. (அ)

# பஸ்-மோ.சைக்கிள் மோதி இருவர் பரிதாபமாக பலி!

கொழும்பு, ஏப். 13

பொலனறுவை - மட்டக்களப்பு பிரதான மார்க்கத்தில் வெலிகந்த சுசிரிகம பிரதேசத்தில் சொகுசு பஸ் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இன்று அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருமே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சுசிரிகம பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதான ஒரு பிள்ளையின் தந்தையும், காலி பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதான ஓய்வுபெற்ற இராணுவ வீரருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிள் சாரதியின் கவனக்குறைவான செலுத்துகை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலனறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தையிட்டியில் உரிமை கோராத காணிகளை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடாது!

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணம் - தையிட்டியில் உரிமை கோரப்படாத காணிகளை பிரதேச மக்களின் நலன்களன்றி எந்தவொரு வெளித் தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் - தையிட்டியில் மக்களின் நிலங்களில் அத்துமீறி கட்டப்பட்ட தையிட்டி விகாரையின் காணி நிலங்களை, தமது உரித்து என உரிமங்களுடன் அடையாளப்படுத்திய ஒரு தொகுதி மக்களிடம் மீள ஒப்படைப்பதற்கு ஏதிர்வரும் 17 ஆம் திகதி நில அளவீடு செய்யப்படவுள்ளன.

இந்த சூழ்நிலையில் அப்பகுதியில் மேலும் பல காணிகள் இன்னமும் அதன் உரிமையாளர்களால் அடையாளப்படுத்தும் சூழ்நிலை இல்லாதிருக்கும் நிலையில், அவற்றை வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்த முயற்சிக்காது காணிகளின் பூர்வீக உரித்தாளர்களுக்கே அவற்றை கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, அவ்வாறு உரிமை கோரப்படாத நிலை உருவாகுமானால் அக்காணிகளை வெளித் தேவைகளுக்காக பயன்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# சர்வதேச பொருளாதார ஒழுங்கை மாற்றியுள்ள மத்திய கிழக்கு போர்!

### பேராசிரியர் நேவிஸ் மொறாயஸ்

கொழும்பு, ஏப். 13

மத்திய கிழக்கு யுத்தம் சர்வதேச பொருளாதார ஒழுங்கமைப்பை மாற்றியமைத்துள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் நேவிஸ் மொறாயஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான தற்போதைய போர் நிலைமையானது, ஆயுதப் போராட்டமாக முடிவுக்கு வந்தாலும் கூட, அது சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் பாரியவை.

இந்தப் போர் வெறுமனே இரு நாடுகளுக்கு இடையிலான மோதல் என்பதைத் தாண்டி, வல்லரசு நாடுகளின் பலம் மற்றும் பலவீனங்களை உலகிற்கு அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

முக்கியமாக கடல்சார் போக்குவரத்து மற்றும் நீரிணைகள் மூடப்பட்டமையால் ஏற்பட்டுள்ள பொருளாதார விளைவுகள், சர்வதேச நாடுகள் எவ்வாறு ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன என்பதை உணர்த்தியுள்ளன.

மறைமுகமாக இருந்த பல பொருளாதார உண்மைகள் இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளதோடு, இனிவரும் காலங்களில் நாடுகள் தமது பொருளாதார உறவுகளை மிகவும் சாமர்த்தியமாகக் கையாள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளன.

பல நாடுகள் ஒரு முழு அளவிலான போரில் ஈடுபட விரும்புவதில்லை என்பதே உண்மை. ஒரு சிலர் அவ்வாறு எதிர்வு கூறினாலும், நாடுகள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவே முயற்சிக்கின்றன-என்றார். (அ)

# பெரமுனவின் மீது போலி பிரசாரங்கள்

## சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 13

பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாட்டாளர் பசான் கஸ்தூரி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி இரண்டு பிரதான விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளார்.

அண்மையில் நவீனமயப்படுத்தப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்ட கோட்டை பேருந்து நிலையத்தின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்ட சம்பவமானது, பொதுஜன பெரமுனவினால் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு செயல் என சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என அவர் இதன்போது தெரிவித்தார்.

குறிப்பாக, தேசிய தொலைக்காட்சியின் இலச்சினையைப் பயன்படுத்தி, பசான் கஸ்தூரியின் புகைப்படத்தை உள்ளடக்கி, அவரே இந்தச் சேதங்களுக்குப் பின்னால் இருப்பதாகக் காட்டும் வகையில் சோடிக்கப்பட்ட ஒரு போலிப் புகைப்படச் செய்தியை அவர் ஆதாரமாகச் சமர்ப்பித்தார்.

அத்துடன், நாமல் ராஜபக்ஷவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பணமோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர் ஒருவர் கலந்து கொண்டதாகக் கூறப்படும் செய்தியும் ஆதாரமற்றது என அவர் தனது இரண்டாவது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொது இடங்களில் வெற்றிலை உமிழ்வது ஒரு கலாசாரம் என்று பொதுஜன பெரமுன கூறியதா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், கட்சியின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கில் இவ்வாறான வதந்திகள் திட்டமிட்டுப் பரப்பப்படுவதாகத் தெரிவித்தார். (அ)

# இலங்கைக்கு அலங்கார செடி கடத்தி வந்த வர்த்தகர் கைது!

கொழும்பு, ஏப். 13

சட்டவிரோதமான முறையில் 7 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய அலங்கார செடிகளை நாட்டுக்குள் கொண்டு வந்த பயணி ஒருவர், விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெயாங்கொடை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இந்தியாவின் பெங்களூர் நகரில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளார்.

அவர் கொண்டு வந்த பயணப் பொதிகளுக்குள் இருந்து 229 அலங்கார செடிகள் கைப்பற்றப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org